பிரசங்க இலக்கம்: 6 வேதப்பகுதி 1யோவான் 1:5-2:2

## இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியும் சிறப்புப் பணிகளும்

1:5அ. வேதாகமத்தின் சில வசனங்களில் ஒளியும் இருளும் சொல்லர்த்தமாக உள்ளபோதிலும் பெரும்பாலான வசனங்களில் இவை "ஜீவனையும் மரணத்தையும்" (மத்.4:16, லூக்.1:79, யோவா.1:4) "ஒழுக்கமான நல்ல நடத்தையையும் தீய நடத்தையையும்" (மத்.6:23, லூக்.11:35, 22:53, யோவா.1:5, 3:19-21, ரோ.13:12, 2கொரி.6:14, எபே.5:8-14, 1யோவா.1:5-7, 2:8-11). "சத்தியத்தையும் பொய்யையும்" (யோவா.1:9, 8:12, 2கொரி.11:14, யாக்.1:17) குறிக்கும் விவரணங்களாக உள்ளன.

1:5. தேவன் எப்படிப்பட்டவர் என்பதை இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தியுள்ளார். தேவன் ஒளியாயிருக்கிறார் என்பதை அப்போஸ்தலர்கள் இயேசுகிறிஸ்துவின் மூலமே அறிந்துள்ளனர். (1யோவா.4:21, யோவா.1:18, 14:9).

1:6-7. தேவனுடன் ஐக்கியமாயிருப்பவன் பாவத்தில் வாழமாட்டான். எனினும் அவன் மகாபரிசுத்தமான தேவனுடன் ஐக்கியமாக இருக்கும்போது தான் பாவி என்னும் உணர்வுடையவனாகவே இருப்பான். "இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்தரிகரித்து, பாவி தேவனுடன் ஐக்கியமாயிருப்பதற்கு உதவி செய்கிறது.

1:8. இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலி, மானிட பாவத்தை நீக்குகிறது என்பதனால், கிறிஸ்தவன் பாவமற்றவனாக இருப்பான் என்று பலர் நினைக்கின்றனர். மேலும் பரிசுத்தமான தேவனுடன் தான் ஐக்கியமாக இருப்பதனால், தான் பாவி அல்ல என்றும் அவன் நினைக்கலாம். ஆனால், இது தன்னைத்தானே வஞ்சித்துக்கொள்ளும் நிலையாகும். "வஞ்சித்தல்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள பதம் பழைய ஏற்பாட்டில் பிழையான வழியில் செல்வதை குறிக்கின்றது. ஒருவன் தான் பாவி என்பதை அறிந்திருந்தால் மட்டுமே, பாவத்தின் நித்திய தண்டனையிலிருந்து மனிதர்களைக் காப்பாற்றக்கூடிய இயேசுகிறிஸ்துவிடம் வருவான். இல்லையென்றால், அவன் பாவத்தின் கொடூரத் தண்டனையான நரக ஆக்கினையை அடைவது நிச்சயம் (1தெச.1:10).

1:9. இயேசுகிறிஸ்துவிடம் அறிக்கையிடும்போது, அவர் பாவங்களை மன்னிக்கிறார். அறிக்கையிடுதல் என்னும் பதம் மூலமொழியில் "ஒரே காரியத்தைப் பேசுதல்" அல்லது "சம்மதித்தல்" என்னும் அர்த்தமுடையது. தன்னுடைய பாவத்தை அறிக்கை செய்பவன், பாவத்தைப் பற்றி தேவன் என்ன கூறுகிறாரோ அதை ஒத்துக் கொள்கிறவனாக இருப்பான்.

மன்னிப்பு என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள பதம், "போகவிடுதல்" அல்லது "விடுவித்தல்" என்னும் அர்த்தமுடையது. தேவன் நம்முடைய பாவத்தை மன்னிக்கும் போது அதை நம்மை விட்டு அகற்றுகிறார். எனினும் இது நமது பாவ சரீரத்திலிருந்து நமக்கு விடுதலையைக் கொடுப்பதில்லை. இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போதே, நம்முடைய பாவ சரீரங்கள் மறுரூபமாக்கப்பட்டு நாம் பாவமற்ற மகிமையின் சரீரத்தைப் பெறுவோம்.

தேவன் நம்முடைய பாவத்தை மன்னித்து, நம்மை சுத்திகரிப்பதற்கு "உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கின்றார்" அதாவது, பாவமன்னிப்பிற்காய்த் தன்னிடம் வரும் பாவியை நான் மன்னிப்பேன் என்று தேவன் தம்முடைய வேதத்தில் தெரிவித்துள்ள வாக்குக்கு அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார் (எண்.14:18, நெகே.9:17, சங்.86:15, 103:8, 145:8, தானி.9:9, யோவே.2:13, யோனா.4:2, நாகூ.1:3).

மானிட பாவத்தை மன்னிப்பதாக வாக்களித்த தேவன், நீதியுள்ளவராகவும் இருக்கின்றார். அவர் மனிதருடைய பாவத்தை மன்னிக்கும்போது, தம்முடைய நீதியைக் கருத்திற்கொள்ளாமல் இருப்பதில்லை. மானிட பாவத்திற்குத் தாம் வகுத்த தண்டனையை நிறைவேற்ற தாமே ஒரு வழியையும் உருவாக்கி, தம்முடைய குமாரனையே மனிதனாக உலகத்திற்கு அனுப்பி, பாவத்திற்கான தண்டனையை அவருக்குக் கொடுத்துள்ளார்.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, 2006.

2:1. இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தில் வாழ்ந்த காலத்தில் மக்களுடைய பாவங்களுக்கான பலியைச் செலுத்தியதோடு அவருடைய பணி முடிவடைந்து விடவில்லை. அவருடைய சிலுவைப் பலி தங்களுடைய பாவத்திற்கானது என்று விசுவாசித்து, அவரைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் பாவம் செய்யும்போது அவர்களுக்காக அவர் தேவனிடம் பரிந்து பேசுகிறவராக இருக்கின்றார். "பரிந்துபேசுகிறவர்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள பதம் "குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் மனிதனுக்குச் சார்பாக பேசுபவன்" என்னும் அர்த்தமுடையது இது தற்கால நீதிமன்றங்களில் ஒரு வக்கீல் தன்னுடைய கட்சிக்காரனுக்குச் சார்பாக பேசுவதைப் போன்ற ஒரு செயல்முறையாகும். "தேவையோடு இருக்கும் நேரத்தில் உதவிக்கு வருபவன்" என்னும் அர்த்தத்தையும் இப்பதம் கொண்டுள்ளது.

கிறிஸ்தவன் பாவம்செய்யும்போது, பிசாசு தேவனிடம் அவனைப் பற்றி குற்றஞ் சாட்டுகிறான் (வெளி.12:10, யோபு.1:6, 2:1). இத்தகைய சந்தர்ப்பங்களில், இயேசு கிறிஸ்து, தம்மை விசுவாசித்து ஏற்றுக்கொண்டவர்களுக்காக தேவனிடம் பரிந்து மன்றாடுகிறார். அவர், "தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்கிறவராயிருக்கிறார்" (எபி.7:25, 8:1-2, ரோ.8:33-34).

2:2. மூலமொழியில் இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலி "ஹிலஸ்மொஸ்" (*hilasmos*) என்னும் கிரேக்கப் பதத்தினால் குறிப்பிடப்பட்டுள்ளது. சில வேத ஆராய்ச்சியாளர்கள் "பாவத்தை அகற்றுதல்" என்பதே இப்பதத்தின் சரியான அர்த்தம் என்று கருதுகின்றனர். ஆனால் ஏனையவர்கள், "பாவத்தின்மீதான தேவகோபத்தை நீக்குதல்" என்றே இப்பதம் மொழிபெயர்க்கப்படவேண்டும் என்று கூறுகின்றனர். எனினும் பாவத்திற் காகச் செலுத்தப்படும் பலிகளில் இவ்விரு அம்சங்களும் இருப்பதைப் பழைய ஏற்பாட்டுப்பலிகள் அறியத்தருகின்றன. பாவத்திற்காகச் செலுத்தப்படும் பலிகளில் பாவம் மட்டுமல்ல, பாவத்தின்மீதான தேவகோபமும் நீக்கப்படுவதை நாம் அவதானிக்கலாம்.

யோவானுடைய புத்தகங்களில் உலகம் என்னும் பதம் மனிதர்களைக் குறிப்பிடும் சந்தர்ப்பங்களில், பெரும்பாலும் தேவனுக்கு எதிராகச் செயற்பட்ட மக்களையே குறிப்பிடுவதை நாம் அவதானிக்கலாம் (யோவா.1:10, 7:7, 8:23, 9:39, 12:31, 15:18-19, 16:33, 17:9, 17:14, 17:16, 17:25, 18:36). இதனால் "நமக்காக மட்டுமல்ல, முழு உலகத்திற்கும்" என்னும் சொற்பிரயோகம், விசுவாசிகளாகிய நமக்காக மட்டுமல்ல விசுவாசியாத மக்களுக்காகவும் என்னும் அர்த்தத்துடனேயே உள்ளது. இயேசுகிறிஸ்து "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற" (யோவா.1:29) "உலக இரட்சகராக" இருக்கின்றார் (1யோவா.4:14). பாவிகளை இரட்சிப்பதற்காக உலகத்திற்கு வந்த இயேசுகிறிஸ்து (1தீமோ.1:15) பாவிகளுக்காக மரித்தார் என்றே வேதாகமம் கூறுகிறது (ரோ.5:6-8). எனினும் இயேசுகிறிஸ்துவினுடைய மரணம் மனிதருக்குப் பயனுடையதாக இருப்பதற்கு அவர்கள் இயேசுகிறிஸ்து சிலுவையில் தங்களுக்காகச் செய்ததை விசுவாசிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவை "விசுவாசிப்பவனுக்கு நித்திய ஜீவன் உண்டு" என்று கூறும் யோவான், விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை. தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" என்பதைத் தன்னுடைய சுவிசேஷப் புத்தகத்தில் அறியத்தந்துள்ளார் (யோவா.3:36).


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, 2006.

பிரசங்க இலக்கம்: 7 வேதப்பகுதி: மத்.13:1-9,18-23 லூக்.8:4-8,11-15

## தேவனுடைய வார்த்தையும் மானிட வாழ்க்கையும்

உவமைகள் கற்பனைக் கதைகள் அல்ல. இயேசுகிறிஸ்து, தாம் வாழ்ந்த பிரதேசத்தின் சம்பவங்களை உவமைகளாக்கி, தமது போதனையை மக்களுக்கு விளக்கிக் கூறினார். தம்முடைய பிரசங்கத்தைத் திரளான மக்கள் கேட்டாலும், அவர்கள் எப்படிப்பட்டவர் களாயிருக்கின்றனர் என்பதை அறியத்தருவதற்காக இயேசுகிறிஸ்து இவ்வுவமையைக் கூறினார்.

விதைப்பவனுடைய உவமையில் விதைகள் நான்கு வகையான நிலங்களில் விழுகின்றன. இவை மனிதருடைய வித்தியாசமான இதயத்தின் நிலையைக் குறிக்கின் றன. விதை தேவனுடைய வசனம். விதைப்பவர் தேவவசனத்தைப் பிரசங்கிப்பவர். இவ்வுவமை தேவனுடைய வார்த்தையைக் கேட்கும்போது அல்லது வாசிக்கும்போது நாம் எவற்றைக் குறித்து கவனமாக இருக்கவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

**1. உடனிருக்கும் பிசாசைக் குறித்து கவனமாக இருக்க வேண்டும்**

வழியருகே விழுந்தவைகளைப் பறவைகள் பட்சித்துப் போட்டன (மத்.13:4). பாலஸ்தீனப் பிரதேசத்தில் தனிப்பட்ட மனிதர்களின் வயல்கள், வேலிகள் மூலம் தனியாகப் பிரிக்கப்பட்டிருப்பதில்லை. எல்லையைக் குறிக்கும் அடையாளங்கள் மட்டுமே இருக்கும். அனைவருடைய வயல்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு, ஒரே வயலாகவே இருக்கும். இதனால், வயல்களுக்கு இடையில் மனிதர்கள் நடந்துசெல்வது வழமை. இத்தகைய வழிகள் மனிதருடைய நடமாட்டம் காரணமாக கடினமான நிலமாக இருக்கும். இத்தகைய இடங்களையே இயேசு “வழியருகே” என்று குறிப்பிட்டுள்ளார்.

வழியருகில் விழுந்த விதைகள் முளைக்கவில்லை. அவற்றைப் பறவைகள் பட்சித்தன. பறவைகள் “பொல்லாங்கன்” என்றும் (மத்.13:19), “பிசாசு” என்றும் (லூக்.8:12) இயேசு குறிப்பிட்டுள்ளார். மனிதன் கேட்கும் அல்லது வாசிக்கும் தேவனுடைய வார்த்தை அவனுடைய வாழ்வில் கிரியை செய்யாதபடி பிசாசு அவற்றை உடனடியாக எடுத்துப் போடுகிறான்.

யோபினுடைய சரிதையில் பிசாசு தேவனுடைய சமுகத்திற்கே போய்வந்தான். நாம் தேவனுடைய வார்த்தையைக் கேட்கும்போது அல்லது வாசிக்கும்போது அவன் ஆலயத்திற்குள், அல்லது நம்முடைய வீடுகளுக்குள் வந்து நம் மனம் தேவனுடைய வார்த்தையின்மீது நாட்டம் கொள்ளாதபடி செய்துவிடுகின்றான். தேவனுடைய வார்த்தையைக் கேட்கும்போது, வேறு சிந்தனைகள், ஞாபக மறதி, தூக்கக் கலக்கம், அசதி போன்றவை பிசாசினாலேயே வருகின்றன. எனவே, பிசாசைக் குறித்து கவனமாக இருக்கவேண்டும்.

**2. உள்ளத்தின் உணர்ச்சிகளைக் குறித்து கவனமாக இருக்கவேண்டும்**

சில விதைகள் அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தன (மத்.13:5). பயிர்ச் செய்கைக்காக உழப்பட்ட வயல்களின் சில பகுதிகளில் மண் ஆழம் குறை வாக இருப்பதோடு, அடியில் சுண்ணாம்புக் கற்பாறைகள் காணப்படும். இவ்விடங்களில் பயிர்கள் ஆழமாக வேர்விட்டு வளரமுடியாது. மேலும் இப்பாறைகளில் தண்ணீர் இராதமையால், முளைக்கும் விதைகள் ஆழமாக வேர்விட்டு வளரமுடியாதிருப்பதோடு, சூரியனின் உஷ்ணம் அதிகரிக்கும்போது பயிர்கள் கருகிவிடுகின்றன (மத்.13:5-6).

ஆழமற்ற மண்ணில் விதைக்கப்பட்டவைகள் முளைத்தாலும் சூரியனின் உஷ்ணம் அவற்றை அழித்துப்போட்டது. இதைப்பற்றி இயேசுகிறிஸ்து விளக்கும்போது வசனத்தை உணர்ச்சிவசப்பட்டு சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்கிறவர்கள், வசனத்தின் நிமித்தம் உபத்திரவமும் துன்பமும் ஏற்படும்போது அவர்கள் இடறலடைவதாக மத்தேயு 13:20-21ல் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் கொஞ்சகாலம் விசுவாசித்து, உபத்திரவம் ஏற்படும் போது பின்வாங்கிப்போவதாக லூக்கா 8:13 கூறுகிறது.

உணர்ச்சிவசப்பட்டு வசனத்தை ஏற்றுக்கொள்பவர்கள், பிரசங்கத்தைப் புகழுகிறவர்கள் அதன்பின்னர் வேறுவிதமான உணர்ச்சிகளினால் ஆட்கொள்ளப்படும்போது வசனத்தை


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, 2006.

மறந்துவிடுகிறார்கள். எனவே தேவனுடைய வார்த்தையைக் கேட்கும்போது உணர்ச்சி வசப்படுவதைக் குறித்து நாம் கவனமாக இருக்க வேண்டும்.

**3. உலகக் காரியங்களைக் குறித்து கவனமாக இருக்கவேண்டும்.**
முள்ளுள்ள இடங்கள் முற்செடிகள் உள்ள இடம் அல்ல. இது பயிர்ச்செய்கைக்காக உழப்பட்ட வயலில் முற்கள் மற்றும் புற்களின் வேர்கள் உள்ள இடமாகும். எனவே பயிர்கள் வளரும்போது, முற்கள் மற்றும் புற்களின் விதைகளும் முளைத்து பயிர்களை விட வேகமாக வளர்ந்து பயிர்களை நெருக்கிப்போட்டுவிடுகின்றன (மத்.13:7). முற் செடிகளாக உலகக் காரியங்களான கவலைகள், ஐசுவரியத்தின் மயக்கம், சிற்றின்பம் என்பன இருப்பதாக இயேசு குறிப்பிட்டுள்ளார். இவைகள், தேவவசனம் வளரமுடியா தபடி செய்துவிடுகின்றன (மத்.13:22, லூக்.8:14).

உலகக் காரியங்களைக் குறித்து கவலைப்படுவது அர்த்தமற்றது. தேவன் நம்மை விசாரிக்கிறவராக இருக்கிறபடியால் கவலைகளையெல்லாம் அவர்மீது வைத்துவிடும்படி வேதம் கூறுகிறது (1பேது.5:7). தேவன் நம்முடைய வாழ்வைப் பார்த்துக்கொள்வார் (சங்.42:5). சகலவற்றையும் தேவனிடம் தெரிவிக்கும்போது நமது கவலைகள் நீங்கி சமாதானம் கிடைக்கும் (பிலி.4:6-7). நம் இதயத்தில் தேவனுடைய வார்த்தை வளரு வதற்கு கவலைகள் தடையாக இருக்காதபடி நாம் பார்த்துக்கொள்ளவேண்டும்.

பணம் மானிட வாழ்வக்கு அவசியமானது. இயேசு பணத்தின்மீதான மயக்கத்தைப் பற்றியே இங்கு குறிப்பிட்டுள்ளார். இதயத்தில் பணத்தின்மீதான மயக்கம் இருக்கும் போது. பணம் சம்பாதிப்பதைத்தவிர வேறு எதைப்பற்றியும் யோசிக்காது. இத்தகைய மனிதர்கள் தேவனுடைய ராட்சியத்திற்குள் பிரவேசிப்பது கடினம் என்று இயேசு தெரிவித்துள்ளார் (மாற்.10:24-25). 1தீமோத்தேயு 6:6-10 பார்க்கவும்.

சிற்றின்பங்களும் தேவனுடைய வார்த்தை வளருவதற்கு தடையாகவே உள்ளன. இவை தேவனுடைய வார்த்தையின்மீதுள்ள ஆர்வத்தை இல்லாமலாக்குகின்றன.

**முடிவுரை**
நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் வளர்ந்து நல்ல பயனைத் தந்தன. நாம் கேட்கும் அல்லது வாசிக்கும் தேவனுடைய வார்த்தை நம்முடைய வாழ்வில் நல்ல பலனைத் தரவேண்டும். அதாவது நம்முடைய இதயத்தில் அவை வேர்விட்டு வளர்ந்து, தேவன் எதிர்பார்க்கும் கனிகளை நம்முடைய வாழ்வில் உருவாக்கவேண்டும்.

தேவனோடு நமக்கு உள்ள உறவு நம்வாழ்வில் கனிகளை உருவாக்க வேண்டும் என்பதை யோவான் 15:1-16 அறியத்தருகின்றது. தேவனுடைய வார்த்தையின் செல்வாக்கு காரணமாக நம்முடைய சிந்தனைகள், செயல்கள் மாற்றமடையவேண்டும். பாவமான சிந்தனைகளும் செயல்களும் நீங்கி பரிசுத்தமான எண்ணங்களும் செயல்களும் நம்வாழ்வில் காணப்படவேண்டும். உலகத்திற்காகவும், உலக உல்லாசங்களுக்காகவும் வாழும் மனிதன் தேவனுக்காக வாழவேண்டும்.

நாம் தேவனுடைய வார்த்தையை கவனமாக வாசிக்கவேண்டும். அவற்றைத் தியானிக்க வேண்டும். அதன்படி வாழவேண்டும். அப்பொழுது தேவன் நம்முடைய வாழ்வில் எதிர்பர்க்கும் மாற்றங்கள் உருவாகும்.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, 2006.

பிரசங்க இலக்கம்: 8 வேதப் பகுதி: ஆதியாகமம் 4:1-9

# கர்த்தர் வெறுக்கும் காயீனின் வழி

உலகின் 'முதல் கொலைகாரனான' காயீனின் வாழ்வு, கிறிஸ்தவர்களாகிய நாம் பின்பற்றக் கூடாத ஒரு வழியாகப் புதிய ஏற்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. "பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலை செய்த காயீனைப் போலிருக்க வேண்டாம்" (1யோவா.3:12), என்று அறிவுறுத்தும் புதிய ஏற்பாடு, தேவனை மறுதலிக்கும் வேதப்புரட்டர்கள் செல்லும் வழியாகக் காயீனின் வழி உள்ளதாகக் கூறுகிறது (யூதா.11).

## (1). அது அவிசுவாசத்தின் வழி (ஆதி.4:1-5அ)

கிறிஸ்தவம் விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்ட மார்க்கமாகும். காயீனின் வழி விசுவாசமுள்ளதாக இருக்கவில்லை. அவன் அவிசுவாசத்துடன் தேவனிடம் வந்தமையால் தேவன் அவனை ஏற்றுக் கொள்ளவில்லை.

விசுவாசம் என்பது 'நம்பப்படுகிறவைகளின் உறுதி' அல்லது 'காணப்படாதவைக ளின் நிச்சயம்' ஆகும் (எபி.11:1). விசுவாசத்தைக் குறிப்பிடும் "பிஸ்டிஸ்" (*pistis*) என்னும் கிரேக்கப்பதம், "அசைக்க முடியாத உறுதியான நம்பிக்கை" என்னும் அர்த்தமுடையது. கண்களினால் காணாததையும், வேதாகமம் சொல்வதை அடிப்படையாகக் கொண்டு உறுதியாக நம்புவதே விசுவாசமாகும் (எபி.11:6). காயீனின் வழி இத்தகைய விசுவாசமுடையதாக இருக்கவில்லை.

தேவனுக்கு காணிக்கை செலுத்தும்போது ஆபேல் தன்னுடைய மந்தையில் 'முதற் பிறந்தவைகளில் கொழுமையானவைகளைத்' தெரிவுசெய்ததை (ஆதி.4:4) வேதாகமம் அவனுடைய 'விசுவாசச் செயல்' என்று கூறுகிறது (எபி.11:4). ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் இருந்த காலத்திலும், அதன் பின்பும், தேவனை வழிபடுகிறவர்களாக இருந்திருக்க வேண்டும். இல்லையென்றால், காயீன் பிறந்தபொழுது, "கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன்" (ஆதி.4:1) என்னும் ஏவாளுடைய கூற்று அர்த்தமற்றதாகவே இருக்கும். எனவே, காயீனும் ஆபேலும், தங்களுடைய பெற்றோரிடமிருந்தே தேவனுக்கு காணிக்கை செலுத்தி அவரை வழிபடும் முறையை அறிந்திருக்கவேண்டும். ஆதாம் கூறியவற்றை ஆபேல் விசுவாசித்துள்ளான். ஆனால் காயீனோ, கடமைக்காகத் தேவனுக்கு காணிக்கை செலுத்தியுள்ளான்.

ஆபேல் விசுவாசத்துடன் காணிக்கை செலுத்தியமையால், அவன் நீதிமான் என்று தேவனால் நற்சாட்சி பெற்றான் (எபி.11:4). ஆதாமின் மூலமாகத் தேவ னைப் பற்றி அறிந்துகொண்ட காரியங்களை ஆபேல் விசுவாசித்து அதன்படி செயற்பட்டமையால், அவன் தேவனுடைய பார்வையில் நீதிமானாக இருந்தான். வேதாகமப் போதனையின்படி, தேவனைப் பற்றி அறிந்து கொள்வதை, அல்லது தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பதே அவருடைய பார்வையில் நீதிமானாக இருப்பதற்கான வழியாக உள்ளது (ஆதி.12:5-6, ரோ.4:1-25).

கிறிஸ்தவர்களாகிய நாம் காயீனின் அவிசுவாச வழியில் செல்கிறவர்களாக இருக்கக் கூடாது. தேவனைப் பற்றி வேதாகமம் கூறும் காரியங்கள் உண்மை என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும் அப்பொழுது நாமும் ஆபேலைப் போல தேவனுடைய பார்வையில் நீதிமான்களாகக் கருதப்படுவோம்.

காயீனுடைய காணிக்கை 'இரத்தம் சிந்தும் பலியாக' இராதமையினாலேயே தேவனால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று சிலர் கருதுகின்றனர். ஆனால், காயீனும் ஆபேலும் தங்களுடைய பாவங்களுக்குப் பலி செலுத்தியதாக ஆதி யாகமம் 4ம் அதிகாரத்தில் குறிப்பிடப்படவில்லை. அவர்கள் தேவனுக்கு காணிக்கை செலுத்தினார்கள் என்றே இவ்வதிகாரம் கூறுகிறது (ஆதி.4:3-4). 'காணிக்கை' என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "மின்ஹா" (*minha*) என்னும் எபிரேயப் பதம் தேவனைக் கனப்படுத்துவதற்காக அவருக்கு ஒரு பரிசைக் கொடுப்பதையே குறிக்கின்றது. இரத்தப்


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, 2006.

பலியைக் குறிப்பிடும் "ஸீபா.'." (*zebah*) என்னும் எபிரேயப் பதம் இவ்வதிகாரத்தில் உபயோகிக்கப்படவில்லை. எபிரேயர் 11:4ல், ஆபேலினுடைய காணிக்கையைப் "பலி" என்று குறிப்பிட்டுள்ளது தவறாகும். இங்கு "தைசியா" (*thysia*) என்னும் கிரேக்கப் பதம் இரத்தப் பலியைக் குறிப்பிடும் சொல் அல்ல. இரத்தமற்ற காணிக்கைகளைத் தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார் என்று கூறுவது வேதாகமப் போதனையை முரண்படுத்தும் கருத்தாகவே உள்ளது (யாத்.23:16, உபா.26:2-4). காயீன் இரத்தப் பலியையே செலுத்தியிருந்தாலும் தேவன் அதை ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார். ஏனென்றால், தேவன் தமக்கு கொடுக்கப்படும் காணிக்கைப் பொரு ளையோ, அல்லது அது கொடுக்கப்படும் சடங்காசார செயல்முறைகளையோ அல்ல, மாறாக அதைக் கொடுப்பவனுடைய உள்ளத்தின் நிலைமை எப்படி இருக்கின்றது என்பதையே பார்க்கிறவராக இருக்கின்றார் (ஆமோ.5:21-24, ஓசி.6:6, ஏசா.1:11-17, மீகா.6:6-8, எரே.7:19-20, லூக்.21:1-4).

## (2). அந்தகார வழி (ஆதியாகமம் 4:5ஆ-7)

காயீனுடைய வழி அவிசுவாசத்தின் வழியாக மட்டுமல்ல, அது அந்தகார வழியாகவும் இருந்தது. அவிசுவாசியாக இருந்த காயீன் மனந்திரும்பி வெளிச் சத்திற்கு வர மனமற்றவனாக இருளிலேயே இருந்தான். மனிதர்கள் மனந்திரும்பி தம்மிடம் வருவதற்குத் தேவன் பல சந்தர்ப்பங்களை அவர்களுக்கு கொடுக்கிற வராக இருக்கின்றார். தேவன் காயீனுடைய காணிக்கையை நிராகரித்த போதிலும், அவனுடைய உள்ளத்தின் நிலைமை மாற்றமடைவதற்காக அவனோடு பேசினார்.

தேவன் தன்னுடைய காணிக்கையை ஏற்றுக்கொள்ளாதது காயீனுக்கு நியாய மானதாகத் தென்படவில்லை. தேவன் என்ன காரணத்திற்காகத் தன்னுடைய காணிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அவன் ஆராய்ந்து பார்க் காமல், தேவனுடைய செயல் நியாயமற்றது என்னும் எண்ணத்தில் இருந்தான். இவ்வசனங்களில் "எரிச்சல்" என்பது மூலமொழியின்படி "கோபம்" என்றே இருக்க வேண்டும். காயீன் தேவன்மீதும் தன் சகோதரன் மீதும் கடும் கோபத்துடன் இருந்தான். அந்தகாரத்தில் இருந்த காயீனின் உள்ளத்தின் நிலையை மாற்றமடைந்த அவனுடைய முகபாவம் வெளிப்படுத்தியது.

ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபோது, தேவன் எவ்வாறு அவர்களைத் தேடி வந்தாரோ, அதேவிதமாக கோபத்தோடு இருந்த காயீனையும் தேவன் தேடி வந்தார். தேவன் காயீனிடம் கேட்ட கேள்விகள், அவன் எதற்காகக் கோபமாக இருக்கிறான் என்பதை அறியாத நிலையில் கேட்கப்பட்டவைகள் அல்ல. மாறாக, காயீன் தான் இருக்கும் நிலையை அறிந்துகொள்வதற்காகவே தேவன் அவனிடம் நீ ஏன் கோபமாயிருக்கிறாய்? உன் முகம் மாற்றமடைந்ததற்கான காரணம் என்ன என்று அவனிடம் கேட்டார். காயீன் தான் எதற்காகக் கோபமாயிருக்கின்றேன் என்பதை ஆராய்ந்து பார்த்து, தன்னுடைய கோபம் நியாயமானதா என்று சிந்தித்துப் பார்ப்பதற்காகத் தேவன் அவன் கோபமா யிருப்பதற்கான காரணத்தைக் கேட்டார்.

தேவனுடைய கூற்று 7ம் வசனத்தில் எவ்வாறு மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்பது சர்ச்சைக்குரிய விஷயமாக உள்ளது. இதற்குக் கரணம், மூலமொழியில் இவ்வசனம் தெளிவற்றதாக இருப்பதோடு, பிற்காலத்தில் திருத்தப்பட்டும் உள் ளது. எனினும், "நீ நன்மை செய்தால் மேன்மையில்லையோ" என்னும் வாக்கியத்தில் "நன்மை செய்தால்" என்பது "சரியானதைச் செய்தால்" என்றும், "மேன்மையில்லையோ" என்பது நீ "ஏற்றுக் கொள்ளப்படுவாய்" அல்லது "மன்னிக்கப்படுவாய்" என்றும் அர்த்தமுடையது. அதாவது, அவன் மனமாற்றம் அடைந்தவனாக சரியான நோக்கத்துடன் இன்னுமொரு காணிக்கையைச் செலுத்தினால் அது ஏற்றுக்கொள்ளப்படும் என்றே தேவன் அவனிடம் கூறியுள்ளார்.

காயீன் தன்னுடைய மனப்பாங்கை மாற்றிக்கொள்ளாவிட்டால், "பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்" என்கிறார் தேவன். "பாவம் இரைக்காகக் காத்திருக்கும் பயங்கரமான ஒரு மிருகமாக இங்கு உவமிக்கப்பட்டுள்ளது. 7ஆம் வசனத்தின் கடைசி இரண்டு வாக்கியங்களிலும் "அவன்" என்பது "அது" என்றும் "அவனை" என்பது "அதை" என்றும் இருக்க வேண்டும். அதாவது "பாவம் வாசற்படியில் படுத்திருக்கும். அதன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும் நீ அதை ஆண்டுகொள்வாய்" என்பதே சரியான மொழிபெயர்ப்பாகும். பாவம் காயீனைத் தன்னிடமாய் வைத்திருக்க விரும்பும். ஆனால்


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, 2006.

அவன் அதை மேற் கொண்டு தன்னுடைய கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்க வேண்டும். பாவம் செய் யும் ஆசை காயீனை ஆட்கொள்ளலாம். அதை அவன் மேற்கொள்ள வேண்டும்.

### (இ) அன்பற்ற வழி (ஆதி.4:8).

அந்தகாரத்திலிருந்த காயீன் வெளிச்சத்திற்கு வராதிருந்தமையால், அவனுடைய வழி அன்பற்றதாக இருந்தது. தன் சகோதரன்மீது கோபம் கொண்ட காயீனின் உள்ளத்தில் பகை காணப்பட்டது. உள்ளத்திலிருக்கும் பகை கொலைக்கு சமமானது என்று வேதம் கூறுகிறது (மத்.5:21-22, 1யோவா.3:15). காயீனின் அன்பற்ற வழி இது உண்மை என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. தன் சகோதரன் மீது கோபப்பட்ட காயீன் அவனைக் கொலை செய்தான் (ஆதி.4:8). இத்தகைய காயீனின் வழியைப் பின்பற்ற வேண்டாம் என்று வேதம் கூறுகிறது (1யோவா.3:12).


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, 2006.

பிரசங்க இலக்கம்: 9 வேதப் பகுதி ஆதியாகமம் 6-9

## வரப்போகும் அழிவும் ஆண்டவரின் வாக்குத்தத்தமும்

உலக வரலாற்றின் மிகமுக்கிய சம்பவம் ஜலப்பிரளயத்தினால் உலகம் அழிவுற்றதாகும். ஆதியாகமம் 6 முதல் 9 வரையிலான அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் இச்சம்பவம் உண்மை என்பதனால், உலகின் பலவேறு பாகங்களில் வாழ்ந்த மக்களின் புராணக்கதைகளில் ஜலப்பிரளயத்தினால் உலகம் அழிந்ததைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் ஜலப்பிரளயத்தினால உலகம் அழிந்தது என்னும் விவரணம் புராணங்களில் இருப்பதற்கு காரணம், இத்தகைய சம்பவம் நடைபெற்றதை புராணங்களை எழுதியவர்கள் அறிந்திருந்ததே காரணமாகும். ஆதியாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இச்சம்பவம் உண்மையாக நடைபெற்றது என்பதை இயேசுகிறிஸ்துவே குறிப்பிட்டுள்ளார் (மத்.24:38-39).

### அழிவுக்கான காரணம் (ஆதி.6:1-6).

இப்பகுதியில் தேவகுமாரர் தேவதூதர்கள் அல்ல. ஏனெனில் அவர்களில் ஆண்-பெண் வேறுபாடோ, இனப்பெருக்கமோ இல்லை. தேவதூதர்கள் திருமணமுடிப்பதில்லை என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளமையால் (மத்.22:30), தேவதூதர் மனிதப் பெண்களின்மேல் ஆசைப்பட்டு அவர்களோடு உறவுகொண்டார்கள் என்னும் பாரம்பரிய யூத-கிறிஸ்தவ கருத்து தவறானதாகவே உள்ளது. இதைப்போல, தேவகுமாரர் பக்தியுள்ள சேத்தின் வம்சத்தினர் என்றும் மனுஷகுமாரத்திகள் பக்தியற்ற காயீனின் வம்சத்தினர் என்னும் பிற்கால கிறிஸ்தவ விளக்கமும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. இது உண்மை என்றால், சேத்தின் வம்சத்தில் சகலரும் ஆண்களாகவும் காயீனின் வம்சத்தில் சகலரும் பெண்களாகவும் இருந்திருக்கவேண்டும். இது நடைமுறையில் சாத்தியப்படும் காரியம் அல்ல.

இவ்வேதப் பகுதி, ஆதியாகமப் புத்தகத்தின் முதற்பகுதிக்கான முடிவுரையாக இருப்பதனாலும், தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட மானிட வம்சத்தின் அழிவுக்கான காரணத்தைப் பற்றிய விவரணமாகவும் இருப்பதனாலும், ஆதியாகமத்தை எழுதியவர், தேவனுடைய சிருஷ்டிப்புச் செயலை அடிப்படையாகக் கொண்டு, அதாவது, தேவன் ஆதாமை மண்ணினால் உருவாக்கியமையால் ஆண்களைத் தேவகுமாரர் என்றும், ஏவாள் ஆதாமிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதியிலிருந்து சிருஷ்டிக்கப்பட்டமையால் பெண்களை மனுஷகுமாரத்திகள் என்றும் குறிப்பிட்டுள்ளார். எனினும், இங்கு சாதராண திருமணத்தைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை. "பெண்களைத் தெரிந்து கொண்டார்கள்" என்பது திருமணத்தைக் குறிப்பிடும் விவரணம் அல்ல. மூலமொழியில் இவ்வாக்கியம், "அவர்களுக்குள்ளே தங்களுக்கு விருப்பமான பெண்களையெல்லாம் எடுத்துக் கொண்டார்கள்" என்றே உள்ளது. புதிய மொழிபெயர்ப்பில், "தாங்கள் தேர்ந்து கொண்டவர்களையெல்லாம் மனைவியர் ஆக்கிக்கொண்டனர்" என்று உள்ளது. ஒருவன் தான் விரும்பிய பெண்கள் யாராக இருந்தாலும், (சொந்த மகள், இன்னுமொருவனுடைய மனைவி, சிறுமி) அவர்கள் அனைவரையும் தங்களுடையவர்களாக்கிக் கொண்டனர். இயேசுகிறிஸ்துவும் நோவாவின் காலத்தைப் பற்றி குறிப்பிடும்போது, இத்தகைய ஒரு நிலையைப் பற்றியே கூறினார் (மத்.24:38-39). மனிதருடைய ஒழுக்கக்கேடான வாழ்க்கை முறையே தேவ தண்டனைக்கான காரணமாக இருந்தது.

### ஆண்டவரின் காருண்யம் (ஆதி.6:8-9)

மானிட பாவத்திற்காகத் தேவன் மனுக்குலத்தை அழிக்கமுற்பட்ட காலத்தில் "நோவா" என்னும் மனிதனுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது (ஆதி.6:8). அவன் நீதிமானாகவும் தேவனோடு வாழ்பவனாகவும் இருந்தான் (ஆதி.6:9). நோவா தன்னுடைய கால மக்களுடைய வாழ்க்கை முறையைப் பின்பற்றவில்லை. அவன் தேவனுடைய வார்த்தையின்படி வாழ்ந்து வந்தான். நம்முடைய நிலைமை எப்படி இருக்கின்றது? நாம் தேவனுடைய கட்டளைகளையா அல்லது உலகத்தின் வாழ்க்கை முறையையா எதனைப் பின்பற்றுகின்றோம்?


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, 2006.

கிருபை என்பது பெறத்தகுதியில்லாததைப் பெற்றுக்கொள்வது. நோவா நீதிமானாக இருந்ததினால் தேவகிருபை அவனுக்கு கிடைத்தது என்றால், கிருபை அர்த்தமற்றதாக இருக்கும். மேலும் "பாவம் பெருகும் இடத்திலேயே தேவனுடைய கிருபை பெருகும்" என்று வேதம் கூறுகிறது (ரோ.5:20). உண்மையில், தேவன் அக்காலப் பாவிகள் அனைவர்மீதும் கிருபைகூர்ந்தார். இதனால்தான் அவர்களை அழிக்கத் தீர்மானித்தும் 120 வருஷங்கள் அவர்கள் மனந்திரும்பி வருவதற்கு அவர்களுக்கு அவகாசம் கொடுத்தார். (ஆதி.6:3- இவ்வசனத்தில் "போராடுவதில்லை" என்பது மூலமொழியின்படி "இருப்பதில்லை" என்று மொழிபெயர்க்கப்படவேண்டும்). தேவன் நோவாவின் மூலமாக வரவிருக்கும் அழிவையும், மனிதர் தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பவேண்டியதன் அவசியத்தையும் அறிவித்த வந்தார். எனவே, 120 வருஷங்களாகத் தேவன் சகல மக்கள் மீதும் கிருபையாக இருந்தார். ஆனால் நோவாவுக்கு இதைவிட அதிக கிருபை கிடைத்தது. தேவன் அவனைத் தம்முடைய செய்தியாளனாகவும், தம்முடைய திட்டத்தை நிறைவேற்றுவதில் (ஜலப்பிரய அழிவிலிருந்து உயிரினங்களைக் காப்பாற்றுவதில்) ஒரு பங்காளனாகவும் ஏற்படுத்தியிருந்தார்.

தேவன் நம் ஒவ்வொருவர் மீதும் கிருபையாக இருக்கின்றார். இதனால், பாவிகளான நமக்கு அவர் கொடுக்கவேண்டிய தண்டனையைக் கொடுக்காமல் நம்மை இம்மட்டும் உயிரோடு வைத்துள்ளார். எரேமியா கூறியதுபோல நாம் நிர்மூலமாகாதிருக்கிறது தேவனுடைய கிருபையே (புலம்.). எனினும் நாம் எல்லோரும் மனந்திரும்பி அவரிடம் வரவேண்டும் என்பதற்காகவே தேவன் பாவத்தினால் நிறைந்திருக்கும் இவ்வுலகத்தை இன்னும் அழிக்காமல் பொறுமையாக இருக்கின்றார் (2பேது.3:9-14). நாம் மனந்திரும்பி அவரிடம் வருவதற்கு இன்னுமொரு புதிய வருடத்தைத் தந்துள்ளார்.

**அழிவிலிருந்து காக்கப்படுதல் (ஆதி.6:10-8:22)**

தம்மை விசுவாசித்த நோவாவையும் அவன் குடும்பத்தினரையும் ஏனைய உயிரினங்களையும் தேவன் காப்பாற்றினார். நோவா தேவனுடைய ஒழுக்கச் சட்டத்தின்படி வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஒரு மனைவி மட்டுமே இருந்தாள். அவனுடைய பிள்ளைகளும் தம் கால மக்களுடைய வாழ்க்கையை அல்ல, தம் பெற்றோரின் முன்மாதிரியைப் பின்பற்றினார்கள் (ஆதி.6:18, 8:16).

நோவா தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து அதன்படி வாழ்ந்துவந்தான் (ஆதி.8:22). இதனால் அவன் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டான் (எபி.11:7). நோவா தன் கண்களினால் காணாததை (அதாவது மழையையும் பிரளயத்தையும்) தேவன் சொன்னதன் நிமித்தம் நம்பினான். அவன் பேழையைக் கட்டியதும், உயிரினங்களைப் பேழைக்குள் கொண்டு வந்ததும் அவன் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தற்கான ஆதாரமாக உள்ளன.

நோவாவின் காலத்தில், தேவன் உலகத்தை அழிக்கத் தீர்மானித்துப் பொறுமையாயிருந்த 120 வருஷங்களில் நோவா கட்டிய பேழையே, வரவிருக்கும் அழிவிலிருந்து உயிரினங்களைக் காப்பாற்றக்கூடிய ஒரேயொரு இடமாக இருந்தது. தற்காலத்தில் தேவன் நோவாவின் காலத்தைவிட அதிக பொறுமையாக இருக்கின்றார். இக்காலத்தில் இயேசுகிறிஸ்து மட்டுமே வரவிருக்கும் அழிவிலிருந்து நம்மைப் பாதுகாக்கும் பேழையாக இருக்கின்றார் (1தெச.1:10). நோவுக்கு காத்தருடைய கண்களில் கிருபை கிடைத்ததுபோல இன்று நமக்கும் கிடைத்துள்ளது. இதனால் உலகத்தின் அழிவு நமக்கு வேதாகமத்தின்மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நோவாவைப்போல, மக்களை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காக இயேசுகிறிஸ்து என்னும் பேழைக்குள் அழைத்துக் கொண்டுவரவேண்டியது நமது பொறுப்பாக உள்ளது.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, 2006.